செ. கு. எண்: 080 நாள் : 09.05.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 9.5.2014

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.ஐயம்பெருமாள் அவர்கள் 31.1.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் நகரம், வடக்கு போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. D.மந்தையன் அவர்கள் 5.2.2014 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.முருகேசன் அவர்கள் 12.2.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.முத்துராஜ் அவர்கள் 13.2.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கொடுங்கையூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு D.ரவி அவர்கள் 29.1.2014 அன்று மதுரவாயல் புறவழிச் சாலை சுங்கச்சாவடி அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 19.2.2014 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்ட ஆயுதப்படை பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. C.ராஜாக்கிளி அவர்கள் 20.2.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், அலங்கியம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. வேணுகோபால் அவர்கள் 19.2.2014 அன்று கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 19.2.2014 அன்று உடல் நலக் குறைவால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்ட பொருளாதார குற்றப் பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு L.ஸ்டீபன் அந்தோணி அவர்கள் 21.2.2014 அன்று ஆதனூர் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்ட ஆயுதப் படை பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.குமரேசன் அவர்கள் 22.2.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஐயம்பெருமாள், மந்தையன், முத்துராஜ், ரவி, ராஜாக்கிளி, வேணுகோபால், கிருஷ்ணமூர்த்தி குமரேசன்; தலைமைக் காவலர் முருகேசன்; முதல் நிலைக் காவலர் ஸ்டீபன் அந்தோணி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9